[1990 ஏப்ரல் 12

(அ) பால் கூட்டுறவு சங்கத்தில் உள்ள அங்கத்தினர்கள் வைத்திருக்கும் கால்நடைகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவ வசதி அளித்தல், செயற்கை முறை கருவூட்டல் நடத்துதல், சரிவிகித கால்நடை தீவனம் அளித்தல், அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்பு பயிற்சி அளித்தல், இவைகள் அனைத்தும் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்துதவற்கும் அதன் மூலம் அம்மாடுகள் தொடர்ந்து அதிக பால் அளிக்கவும் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) அதிக அளவில் பால் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தவும் மற்றும் விற்பனை செய்யவும், தகுந்த அளவில் உள்ளீடு வசதிகள் (Infrastructure facilities) அளித்தல், பால் கொள்முதல் வழிகள் அமைத்தல், பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், பால் பதப்படுத்தப்படும் ஆலைகள் அமைத்தல், பால் துகள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் நவீன பால் விற்பனை முறை ஆகியவைகள் நுகர்வோர்கள் நலனுக்காக அமைத்தல் ஆகியவைகள் அடங்கும்.

பால் வளத் துறையின் வணிக சம்பந்தமான பால் கொள்முதல், பக்குவப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திடம் 1—7—1972 முதல் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் இந்நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் ஆக 1—2—1981 முதல் மாற்றப்பட்டது. தமிழ்நாடு பால்வள நிறுவனம் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் இவ்விணையம் மேற்கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டது.

இவ்விணையம் பால்வளத் திட்டங்களைப் பால் பெருக்குத் திட்டங்கள்கீழ் தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரியம், நிதி உதவியுடன், தமிழ்நாட்டில் உள்ள 15 மாவட்டங்களில் சென்னை, செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, வட ஆற்காடு, அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார், மதுரை, திண்டுக்கல்-காயிதே-மில்லத், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிறைவேற்றி வருகின்றன.

பால்வளத் திட்டங்கள் எஞ்சியுள்ள 6 மாவட்டங்களான கன்னியாகுமரி, நெல்லை - கட்டபொம்மன், சிதம்பரனார், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் காமராசர் மாவட்டங்களில் மாநில திட்ட நிதி மற்றும் சிறப்பு திட்டங்களான மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆதி திராவிடர் நலத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.